# 100 நாள் ஆட்சி - ‘ரீல்ஸ்’ காட்சிகளும் ‘ரியல்’ நிலவரமும்!

**ரீல்ஸ் -** பெண்களுக்கு அண்ணனாக, தம்பியாக, மகனாக இருப்பேன் என்று டயலாக் பேசி அதை ரீல்ஸாகப் பரப்பியவர் விஜய்.

**ரியல் - 100 நாள் ஆட்சியில் சூலூரில் 3 வயது பெண் குழந்தை முதல் அந்தியூரில் 85 வயது மூதாட்டி வரை பாலியல் கொடுமைக்கு ஆளான கொடூரம் தொடர்ந்து கொண்டிருக்கிறது. பெண்களுக்கு பாதுகாப்பில்லாத மாநிலமாகத் தமிழ்நாடு மாறியிருக்கிறது. த.வெ.க.வின் ஸ்ரீவைகுண்டம் எம்.எல்.ஏ., இராணிப்பேட்டை மாவட்ட நிர்வாகி உள்பட பலர் மீதும் த.வெ.க. கட்சியை சார்ந்த பெண்களே பாலியல் புகார்களைத் தெரிவித்தும் இதுவரை சட்டப்படியான எந்த நடவடிக்கையையும் விஜய் எடுக்கவில்லை. மாறாக, புகார் கொடுத்த பெண்மணியை கட்சியை விட்டு நீக்கியிருக்கிறார்.**

**ரீல்ஸ் -** போதையை ஒழிப்பேன் என்று மாரத்தான் ஓட்டப் போட்டியில் கலந்து கொண்டார் விஜய். கையெழுத்துப் போட்டார். போதை ஒழிப்பு நாள் உறுதி மொழி எடுத்தார். எல்லாவற்றையும் ரீல்ஸ்களாகப் போட்டு விளம்பரம் தேடினார்.

**ரியல் - அவர் போதை ஒழிப்பு உறுதி மொழி எடுத்த அதே நாளிலேயே கோவையில் தனியார் கல்லூரியில் போதைப் புழக்கம் பற்றி புகார் கொடுத்த மாணவர் அமுதனை போதைக் கும்பல் கொடூரமாக கொலை செய்தது. தமிழ்நாடு முழுவதும் போதைப் பொருள் புழக்கமும், அதன் தொடர்பான குற்றங்களும் அதிகரித்துள்ளன.**

**ரீல்ஸ் -** தி.மு.க ஆட்சியில் 10 இலட்சம் கோடி ரூபாய் கடன் வாங்கி கஜானாவை காலி செய்துவிட்டதாக, முதலமைச்சராகப் பொறுப்பேற்ற மேடையிலேயே பேசினார் விஜய். இதை அவரது கட்சியின் சார்பில் பணம் வாங்கிக் கொண்டு ரீல்ஸ் போடும் ஆட்கள் பரப்பினார்கள்.

**ரியல் - ஆட்சிக்கு வந்த 3 மாதத்திலேயே 20ஆயிரம் கோடி ரூபாய் கடன் வாங்கியிருப்பதுடன், த.வெ.க அரசு தாக்கல் செய்த பட்ஜெட் மூலம் ஒரே ஆண்டில் 1 இலட்சம் கோடி ரூபாய்க்கு மேல் கடன் வாங்கும் அரசு என்ற நிலையையும் உருவாக்கியுள்ளது த.வெ.க அரசு.**

**ரீல்ஸ்-** மெட்ரோ இரண்டாம் கட்டத் திட்டம், கடல் நீரைக் குடிநீராக்கும் இரண்டாவது அலகு திட்டம், செயின்ட் கோபைன் கண்ணாடித் தொழிற்சாலை உள்ளிட்ட இடங்களுக்குச் சென்று ஆய்வு செய்து ரீல்ஸ் போட்டது விஜய் அரசு.

**ரியல் - ரீல்ஸ்க்காக விஜய் சென்ற இடங்கள் அனைத்தும் தி.மு.க. ஆட்சியில் உருவாக்கப்பட்டவையாகும். ஊரான் வீட்டு நெய்யில் ஸ்வீட் செய்து கொண்டிருப்பவர் விஜய்தான்.**

**ரீல்ஸ் -** ஆகஸ்ட் 13ஆம் தேதி திடீரென முதலீட்டாளர் மாநாடு நடத்துவதாக அறிவித்து, 1 இலட்சம் கோடி முதலீடுகளை ஈர்த்ததாக ரீல்ஸ் போட்டு விளம்பரம் தேடியது விஜய் அரசு. விஜய்யும் இதில் கலந்து கொண்டு போஸ் கொடுத்தார்.



**கோவி.லெனின்**
**தி.மு.க தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர்**

**ரியல் - முதலீட்டாளர் மாநாட்டிற்கு ஊடகத்தினரை அனுமதிக்கவில்லை. அந்தளவு ரகசியமாக நடந்த மாநாட்டில் போடப்பட்டதாகச் சொல்லப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் ஒன்று, வெறும் ஒரு இலட்ச ரூபாயில் 4 மாதங்களுக்கு முன் தொடங்கப்பட்ட லைட் ஹவுஸ் க்ரீன் டேட்டா சென்டர் நிறுவனம் 10 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்வதாகக் காட்டப்பட்டுள்ளது. மேலும், இந்த முதலீட்டாளர் மாநாட்டில் பங்கு பெற்ற பெரிய நிறுவனங்களில் 70% அளவுக்கு தி.மு.க. ஆட்சியில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்து கொண்ட நிறுவனங்களாகும். அதை த.வெ.க. கணக்கில் சேர்த்து ரீல்ஸ் ஓட்டியிருக்கிறார்கள்.**

**ரீல்ஸ் -** த.வெ.க.வின் தேர்தல் அறிக்கையில் மகளிருக்கு மாதம் 2500 ரூபாய், ஆண்டுக்கு 6 சிலிண்டர், தமிழ்நாடு முழுவதும் மகளிருக்கு இலவச பஸ் பயணம், பட்டதாரி இளைஞர்களுக்கு மாதம் 4000 ரூபாய் என ஏகப்பட்ட வாக்குறுதிகளை அள்ளிவிட்டு, இதையெல்லாம் விஜய் தன் சொந்த பணத்திலேயே கொடுப்பார் என்றும் ரீல்ஸ் போட்டனர்.

**ரியல் - வாக்குறுதியாகத் தந்த அறிவிப்புகள் எதையுமே 100 நாள் ஆட்சியில் நிறைவேற்றவில்லை. தி.மு.க. ஆட்சிக்காலத் திட்டங்களுக்குப் பெயர்களை மாற்றுவதும், ‘வெற்றி’ என்ற பெயரைச் சேர்க்கும் வெற்றுத் திட்ட அறிவிப்புகளுமே வெளியாகியுள்ளன.**

**ரீல்ஸ் -** விஜய் கர்நாடகாவுக்குப் போகிறார் என்ற செய்தியைக் கேட்டதுமே வருண பகவான் கண் திறந்து மழை பொழிந்ததாகவும், கர்நாடக அரசு அணைகளை திறந்துவிட்டதாகவும் சினிமா துணை நடிகைகளை வைத்து ரீல்ஸ் வெளியிட்டனர்.

**ரியல் - டெல்டா மாவட்டங்களின் குறுவை நெல் சாகுபடிக்காக ஜூன் 12ஆம் தேதி மேட்டூர் அணையைத் திறக்க வேண்டும். 5 ஆண்டுகால திராவிட மாடல் ஆட்சியில் குறிப்பிட்ட காலத்தில் திறக்கப்பட்டது. இப்போது ஆகஸ்ட் மாதத்தில் பாதியைக் கடந்த பிறகும், அதாவது 60 நாள் கடந்த பிறகும் மேட்டூர் அணை திறக்கப்படவில்லை. குறுவை நெற்பயிர் என்பது 120 நாட்களில் அறுவடை செய்ய வேண்டியதாகும். அதில் பாதிக் காலம் கடந்துவிட்டது. இனி தண்ணீர் கிடைத்துப் பயிரிட்டாலும் வடகிழக்குப் பருவமழையால் பயிர்கள் மூழ்கும் அபாயம் ஏற்படும்.**

**ரீல்ஸ் -** ஊழலை ஒழித்துவிட்டது த.வெ.க. என்று நம்ப வைப்பதற்கான ரீல்ஸ் போட்டு விளம்பரம் தேடுகிறார்கள்.

**ரியல் - அரசு வழக்கறிஞர் பதவிக்கு 20 இலட்ச ரூபாய் வரை பணம் வாங்கிக் கொண்டு பதவி தருவதாக த.வெ.க.வைச் சேர்ந்த பெண் வழக்கறிஞரே அமைச்சர் மீது புகார் தெரிவித்தார். அந்தப் பெண் வழக்கறிஞரை கட்சியை விட்டு நீக்கி விட்டார்கள். பதவிக்குப் பணம் என்பது தொடர்கிறது.**

**ரீல்ஸ் -** விஜய்யை ஹீரோவாக சித்தரிக்கிறார்கள்

**ரியல் - மக்களுக்கு வில்லனாகவும் நிர்வாகத்தில் காமெடியனாகவும் இருக்கிறார்.**

### அண்ணல் அம்பேத்கர் அயலக உயர்கல்வித் திட்ட

## மாணவர்களுக்கான கல்விக் கட்டணத்தைச் செலுத்துவதில் அலட்சியம் ஏன்?

### முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கண்டனம்!

சென்னை, ஆக. 20 - “அண்ணல் அம்பேத்கர் அயலக உயர்கல்வித் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டை செலுத்துவதில் அலட்சியம் ஏன்?” என்று முன்னாள் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-



அண்ணல் அம்பேத்கர் அயலக உயர்கல்வி திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டை நடப்பாண்டில் அதிகரித்து இருப்பதாக அரசுத் தரப்பில் சொல்லப்படுகிறது. ஆனால் அத்திட்டத்தின் கீழ் 2025-2026ஆம் கல்வியாண்டில், அதாவது திராவிட மாடல் ஆட்சி காலத்தில் மலேசிய தேசிய பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சிப் படிப்பில் சேர்க்கைப் பெற்று பயின்றுவரும் மாணவருக்கு, நடப்பு கல்வியாண்டிற்கான கட்டணத்தை செலுத்துவதில் ஏன் இவ்வளவு அலட்சியம்?

ஏற்கனவே, இங்கிலாந்தில் உள்ள கல்வி நிறுவனங்களில் பட்டமேற்படிப்புக்கு சேர நடப்பாண்டில் விண்ணப்பித்துள்ள நம் மாணவர்களுக்கு ‘மாநில அரசின் கல்வி உதவித்தொகையை ஏற்க முடியாது இந்திய ஒன்றிய அரசின் மூலம் வழங்கப்பட்டால் மட்டுமே ஏற்றுக்கொள்ள முடியும்’ என்ற புதிய விதியை சுட்டிக்காட்டி சேர்க்கை பெறுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

அந்த புதிய விதிக்கான காரணமாக கல்வி நிறுவனங்கள் தரப்பில் அளிக்கப்பட்ட விளக்கத்தில் “மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கும் அமைப்பு, அதனை இடையிலேயே நிறுத்திவிட்டால் கல்விக்கட்டணம் செலுத்த முடியாமல் மாணவர்கள் படிப்பை தொடர முடியாத நிலை உருவாகுகிறது; எனவே இடைநிற்றல் ஏற்படும் சூழலும் ஏற்படுகிறது” என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி பார்த்தால், மலேசியா நாட்டில் பயிலும் நம்முடைய மாணவர்களுக்கு உரிய நேரத்தில் கட்டணம் செலுத்தாமல் த.வெ.க. அரசு அலட்சியமாக இருப்பதால், அங்கும் எதிர்காலத்தில் தமிழ்நாட்டு அரசின் கல்வி உதவித்தொகையை நேரடியாக ஏற்க உயர்கல்வி நிறுவனங்கள் மறுக்கும் வகையில் விதிகள் உருவாக்கப்பட்டு விடுமோ என்ற அச்சம் ஏற்படு கிறது.

இன்னும் இதுபோல எத்தனை நாடுகளில் பயிலும் மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்களோ என்கிற கேள்வியும் எழுகிறது. Take Diversion அரசின் இத்தகைய அலட்சியப் போக்கு, அரசின் உதவித்தொகையை மட்டுமே நம்பி கல்விக்காக கடல்கடந்து சென்றுள்ள மாணவர்களுக்கு எத்தகைய மனஅழுத்தத்தை ஏற்படுத்தும் என்பதை நினைத்துப் பார்க்கவே வேதனையாக இருக்கிறது. அலட்சியப் போக்கினை கைவிட்டு, அண்ணல் அம்பேத்கர் அயலக உயர்கல்வித் திட்ட மாணவர்களுக்கான கல்விக் கட்டணத்தை உரிய காலத்தில் விடுவிக்க முதலமைச்சர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

### ஈரோடு தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.திருவாசகம் தாயார்

## திருமதி தேன்மொழி ஜெயக்குமார் மறைவு!

### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஆக. 20 -

ஈரோடு தெற்கு மாவட்ட திமுக இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.திருவாசகத்தின் தாயார் திருமதி. தேன்மொழி ஜெயக்குமார் அவர்கள் நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் லட்சுமி கார்டன் இல்லம் - திண்டலில் உள்ள அவரது இல்லத்தில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்து, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரது குடும்பத்தாருக்கு தெரிவித்துள்ளார்.

### உள்நாட்டிலிருந்தும் - வெளிநாடுகளிலிருந்தும்

## பிரதமருக்கு வழங்கப்பட்ட நினைவுப் பரிசுகள், அன்பளிப்புகள் ஏலம் விடப்பட்டனவா?

### பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி கேள்வி!

புதுடெல்லி, ஆக. 20 - உள்நாட்டிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் பிரதமருக்கு வழங்கப்பட்ட நினைவுப் பரிசுகள், அன்பளிப்புகள் போன்றவை ஏலம் விடப்பட்டனவா? அவ்வாறெனில், இந்த ஏலங்கள் மூலம் அரசுக்குக் கிடைத்த தொகை குறித்த விவரங்கள் என்ன? கடந்த ஐந்து ஆண்டுகளில் ஏலங்கள் நடைபெற்ற தேதிகள் யாவை? மற்றும் 2014 ஆம் ஆண்டிற்கு முன்பு எத்தனை முறை ஏலங்கள் நடத்தப்பட்டன? என்பது குறித்த விவரங்கள் மற்றும் அவற்றின் தேதிகள் யாவை? என்று பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர், திருப்பூர் தெற்கு மாவட்ட கழகப் பொறுப்பாளர் கே.ஈஸ்வரசாமி மக்களவையில் கேள்வி எழுப்பினார்.

பண்பாடு மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் அளித்த பதில் வருமாறு : ஆம், பிரதமருக்கு வழங்கப்பட்ட நினைவுப் பரிசுகள் மற்றும் அன்பளிப்பு களை ஏலம் விட்டதன் மூலம் அரசுக்குக் கிடைத்த தொகை குறித்த விவரங்கள் பின்வருமாறு:



1வது பதிப்பு (2021) : ரூ.3.1 கோடி, 2வது பதிப்பு (2022) : ரூ.3.6 கோடி, 3வது பதிப்பு (2023) : ரூ. 15.8 கோடி, 4வது பதிப்பு (2023) : ரூ. 14.4 கோடி, 5வது பதிப்பு (2024): ரூ. 11.16 கோடி, 6வது பதிப்பு (2024): ரூ.2.24 கோடி, 7வது பதிப்பு (2025) : ரூ. 1.89 கோடி ஆகும், கடந்த ஐந்து ஆண்டுகளில் நினைவுப் பொருட்கள் மற்றும் பரிசுகளுக்கான மின்னணு ஏலங்கள் (E Auctions) நடத்தப்பட்ட தேதிகள்/காலம் பின்வருமாறு : 2021 : செப்டம்பர் 17 முதல் அக்டோபர் 7 வரை, 2022: செப்டம்பர் 17 முதல் அக்டோபர் 12 வரை, 2023: செப்டம்பர் 17 முதல் அக்டோபர் 31 வரை, 2024 : செப்டம்பர் 17 முதல் அக்டோபர் 31 வரை, 2025 : செப்டம்பர் 17 முதல் அக்டோபர் 31 வரை நடைபெற்றுள்ளது. 2019க்கு முன்பு, நவீன கலைக்கான தேசிய காட்சியகத்தால் (NGMA) நினைவுப் பொருட்கள் மற்றும் பரிசுகளுக்கான ஏலம் எதுவும் நடத்தப்படவில்லை என்று தெரிவித்தார்.




முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மனசாட்சியாக திகழ்ந்த முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலி மாறன் அவர்களின் 93 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு புதுக்கோட்டை மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் முரசொலி மாறன் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. நிகழ்வில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கவிச்சுடர் கவிதைப்பித்தன், முன்னாள் மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வி.ஆர்.கார்த்திக் தொண்டைமான், மேயர் திலகவதி செந்தில், த.சந்திரசேகரன், செ.அசோக்பாண்டியன், சு.சண்முகம், துணை மேயர் எம்.லியாகத் அலி, வே.ராஜேஷ், அரு.வீரமணி, க.மதியழகன், பெ.ராஜேஸ்வரி, தவ.பாஞ்சாலன், மு.க.ராமகிருஷ்ணன், என்.சாத்தையா, இராசு.சந்தோஷ், செல்லத்துரை, எம்.எம்.பாலு, செந்தாமரை பாலு, வி.ஜி.ஆர்.மணிவண்ணன், டி.எம்.ஆர்.ராமமூர்த்தி, சி.அரங்கநாயகம், எஸ்.வி.ஆர்.ஸ்டாலின் ராஜா, டி.அப்புக்காளை, காதர்கனி, வடவாளம் க.செ.மணிமாறன், சி. மதியழகன், பழனிவேலு, கி. சுப்பிரமணியன், கைலாசம், ராயல் சபா, தெய்வானை, எல்.ஐ.சி ரமேஷ், எழில் ராஜா, முத்துக்கருப்பன், கீரனூர் ஜாபர், தாயினிப்பட்டி கே.ஆர்.என். கே.மணிராஜ்உள்ளிட்ட மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, வட்ட கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் பங்கேற்றனர்.



மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறையில் அண்ணா பகுத்தறிவு மன்றத்தில் நகர தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மனசாட்சியாக விளங்கிய மறைந்த முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலிமாறனின் அவர்களின் 93வது பிறந்த நாளை முன்னிட்டு அவரது திருஉருவப்படத்திற்கு மயிலாடுதுறை நகர்மன்ற தலைவரும் நகர கழக செயலாளருமான குண்டாமணி (எ) என்.செல்வராஜ் தலைமையில் கழகத்தினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். உடன் நகர் மன்ற துணைத் தலைவர் எஸ்.எஸ்.குமார், மாவட்ட நெசவாளணி அமைப்பாளர் செல்வராஜ், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் எம்.எஸ்.விஜய், நகர நிர்வாகிகள் மலைக்கோயில் பிரபாகர், பஞ்சுரவி உள்ளிட்ட பலர் உள்ளனர்.